**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, CHEYYAR**
**Present: Thiru.K.R. Balaji B.A., B.L.(Hons.)**
**Judicial Magistrate, Cheyyar.**

**CC 186/2023**

Deposition of witness for PW 2

| | | |
|---|---|---|
| Name | : | ஓசூரான் |
| Son of | : | சம்பத் |
| Village | : | ராமகிருஷ்ணாபுரம் |
| Taluk | : | செய்யார் |
| Age | : | 26/2025 |

Solemnly affirmed in accordance with the Provisions of OATHS Act of 1969 on the day of 26.05.2025
(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் ராமகிருஷ்ணாபுரம், செய்யாறு தாலுக்காவில் வசித்து வருகிறேன். நான் திரிசூலம் பைனான்ஸ் நிறுவனத்தில் வசூல் முகவராக வேலை செய்கிறேன். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு எனது மாமா வேலு (எ) சக்திவேல் என்பவரின் Splendor Plus வண்டி காணாமல் போயிருந்தது. பிறகு எனது மாமாவின் வண்டி கிடைத்து விட்டது என்று செய்யாறு காவல் நிலையம் வரச் சொன்னார்கள். அங்கு சென்ற போது காவல் நிலையத்தில் Splendor Plus வண்டியையும் , ஆஜர் எதிரிகளையும் பார்த்தேன். பிறகு போலிசார் ஆஜர் எதிரிகளிடம் வண்டியை எந்த இடத்தில் இருந்து எடுத்தார்கள்ள என்று விசாரித்து கொண்டிருந்தார்கள். அதற்காக ஒரு கையொப்பம் செய்தேன். பிறகு எனது மாமாவின் வீட்டிற்கு சென்று விசாரணை செய்ததற்கு மற்றொரு கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது தான். **(மேற்படி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.2/அ.சா2, அ.சா.ஆ.3/அ.சா2 மற்றும் அ.சா.ஆ.4/அ.சா2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலிசார் விசாரணையில் கடந்த 03.02.2023ந் தேதி மதியம் 12.00 மணியளவில் பாப்பாந்தாங்கல் ஜங்ஷனில் மோரணம் காவல் நிலைய போலிசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் TN 25 AT 5892 என்ற Hero Splendor Pro என்ற இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், அவர்களை போலிசார் விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகவும், அப்பொழுது ஆஜர் எதிரிகள் இருவரும் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் அளித்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் அதே இடத்தில் எதிரிகளிடமிருந்து TN 25 AT 5892 என்ற Hero Splendor Pro இருசக்கர வாகனத்தை சுகுமார் மற்றும் எனது முன்னிலையில் மதியம் 02.15 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை

Taken over by me in open Court, read over to the witness and admitted by the witness to be correct

Sd/-(K.R. Balaji)
Judicial Magistrate,
Cheyyar